ஓம்

| எது<br>ஏன்<br>யாரால்<br>எப்பொழுது, எங்கு<br>எப்படி | What<br>Why<br>By Whom<br>When & Where<br>How |
|---|---|

நாம் எந்த செயலையும் மேற்கூறிய 5 கேள்விகளையும் கேட்டு சரியாக புரிந்து கொண்டால் மட்டுமே செயல் சரியாக, சிறப்பாக அமையும். நமது உபநிஷதுகள் குரு – சிஷ்ய (சம்வாதங்கள்) கேள்வி பதில்களாகவே உள்ளன. எந்த ஒரு விஷயமானாலும் அந்த செய்தியிலும் அதை தெரிவிப்பவரிடமும் நம்பிக்கை அவசியம். மேலும், பாகுபாடற்ற திறந்த மனதும் தேவை. நாம் பொதுவாக விஷயங்களை நமது அறிவு என்ற அளவுகோலை மட்டுமே உபயோகித்து புரிந்து கொள்கிறோம். நமது அறிவுக்கு எட்டாத விஷயங்களை நம்பிக்கையுடன் ஆராய்ந்தால் நிச்சயமாக சரியாக புரிந்து கொள்ள முடியும்.

நாம் இங்கு பார்க்கப்போகும் விஷயங்கள் சனாதன தர்மத்தை பற்றி என்பதால் வேதத்திலும் குருவிடத்திலும் நம்பிக்கை அவசியம். வேதத்தில் நம்பிக்கை உள்ளவர்களே ஆஸ்தீகர்கள் ஆவர். வேதத்தின் முக்கிய அம்சங்களாவன:

1. பரம்பொருள் ஒன்றே. அதன் சக்தியின் வெளிப்பாடே இந்த ப்ரபஞ்சம்.
2. நமக்கு நாமே பொறுப்பு. (கர்மா கோட்பாடு). பாப புண்யம், மறு பிறவி இவற்றில் நம்பிக்கை. எவரும் தம் புலன்களால் அறிந்து கொள்ள முடியாத விஷயங்களை, பலன்களை சொல்வதற்கே வேதம்.
3. மனித ஜன்மமே நாம் நம்மை அறிந்துகொள்ள. மனிதனுக்கு அந்த சக்தி உள்ளது.
4. நம்மை அறிவதும் பரம்பொருளை அறிவதும் ஒன்றே.
5. வேதம் நமக்கு இந்த ப்ரபஞ்சத்தை அறிமுகப்படுத்தி அதில் நாம் செய்ய வேண்டிய கடமைகளையும், விலக்கவேண்டிய செயல்கலளையும் தெரிவிக்கிறது. இவற்றின் மூலம் நம் அறியாமையை விலக்கி, நாம் நம்மை அறிந்து கொள்ளச் செய்கிறது.

தற்போதுள்ள கல்வி முறை மற்றும் சூழ்நிலை இவற்றின் தாக்கத்தால் சாஸ்த்திரத்தில் கூறியுள்ள நமது கர்மாக்களை சரிவர புரிந்து கொள்ள இயலாத்தால் அவற்றின் முக்யத்துவத்தை உணரமுடியவில்லை. ஆகவே பலர் இக்கர்மாக்களை செய்வதில்லை; செய்தாலும் சிரத்தயுடன் செய்வதில்லை. நமது வேதங்களிலும் பகவத் கீதையிலும் கூறியுள்ள உண்மைகள், உலகம் முழுவதும் உள்ள அறிஞர்களால், மிகச்சிறந்த, உலகம் உய்ய வந்த கொடையாக சிறப்பிக்கப்படுகிறது.

நமது வேதத்தின் குறிகோள் ஜீவன்கள் தன்னை அறிய வேண்டும் என்பதே. தன்னை அறிதல் என்றால் பரப்ரும்மத்தை அறிதல். இந்த உயர்ந்த

லக்ஷியத்தை அடைய வேதம் நாம் செய்ய வேண்டியதை பட்டியலிடுகிறது. இக்கர்மாக்களை கர்மமாகவும் கர்மயோகமாகவும் செய்வதைபற்றி கீதை விவரிக்கிறது. அவற்றை யோகமாக செய்வது என்பது ஒரு மனிதனின் மேற் கூறிய உயர்ந்த லக்ஷியத்தை அடைய தேவையான மன வளர்ச்சியின் படியே ஆகும்.

வேதத்தில் கூறியுள்ள கர்மாக்களை வேத மந்த்ரங்கள் என்ற முத்துக்களை கோர்த்து நமது ரிஷிகள் அழகிய மாலையாக நமக்கு அளித்துள்ளர்கள். அவற்றை ஒவ்வொரு க்ருஹத்திலும் அவதரித்த நம் பெரியோர்கள் செம்மைபடுத்தி சம்ப்ரதாயங்களாக அருளியுள்ளனர். இதனால் நாம் நம் கடமைகளை சரிவர செய்து நம்மை அறியும் முயற்சியில் ஈடுபடுவோமாக. நமது க்ருஹத்தில் பரம்பரையாக செய்து வந்த சம்ப்ரதாயங்களையே பின்பற்ற வேண்டும் என்பது வேதத்தின், குருவின் ஆஞ்யை. அப்படியே செய்வோமாக. அப்பொழுதான் கர்மத்தை கர்ம யோகமாக செய்ய முயல முடியும்.

இங்கு நாம் வேதத்தில் கூறிய 40 கர்மாக்களின் எது, ஏன், யாரால், எப்பொழுது, எப்படி போன்ற விபரங்களை பார்க்கலாம்.

| | |
|---|---|
| எது | கர்மாவை பற்றி சிறு விளக்கம் |
| ஏன் | செய்வதால் வரும் பாப புண்யம். எந்த கர்மாவை செய்தாலும் பலன் உண்டு. |
| யாரால் | செய்ய தகுதியானவன் – அதிகாரி ; கலந்து கொள்ள வேண்டிய, விலக்கப்பட வேண்டியவர்கள் |
| எப்பொழுது, எங்கு | செய்ய வேண்டிய, விலக்கப்பட வேண்டிய நேரங்கள் இடங்கள். நேரமும் இடமும் ஒன்றுக்கொன்று சம்பந்தம் உள்ளவை. |
| எப்படி | செய்முறை |

ஓம் தத் சத்